நீதிமன்றம்: மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் பூதப்பாண்டி.

வழக்கு எண் : STC 496/ 2022

வழக்கு சாட்சி: P.W. 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - கோபாலன் | ஜாதி | - |
| தந்தை பெயர் | - | தொழில் | - |
| கிராமம் | - | சமயம் | - |
| தாலுக்கா | - | வயது | - |
| தேதி | - 14.10.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.10.2025

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் BNSS பிரிவு 355 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை**

1) நான் அருமநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன்.

2) எதிரியை எனக்கு தெரியும், அவர் எனது எதிர் வீட்டை சார்ந்தவர் ஆவார்.

3) 18.10.2020 அன்று காலை 11.00 மணிக்கு நான் எனது தோட்டத்திற்கு சென்றுவிட்டு எனது வீட்டில் இருந்த போது அவர் ரோட்டில் நின்று என்னை பிச்சைக்காரபயல, பிழைக்கவந்த பயலே, தேவடியாபயலே இங்கிருந்து ஓடிரு என்று என்னை மிரட்டினார். உன்னை கொன்று போடுவேன் என்று பேசினார். நான் அமைதியாக இருந்துவிட்டேன். ஏற்கனவே அவர் என்னை அடித்து வழக்கை சமரசமாக தீர்த்துள்ளேன். நான் பயந்து வீட்டிலேயே இருந்தேன். நான் எனது வீட்டில் கேமரா வைத்திருந்தேன். அதிலிருந்த நகலை போலிசிடம் ஒப்படைத்தேன்.

4) பின்பு 22.10.2020 போலிசில் அந்த நகலை வைத்து ஒப்படைத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும்.

5) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) போலிஸ் என்னை ஒரு நாள் விசாரித்தார். நான் முதல் விசாரணையில் கூறியவாறு போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன்.

2) எனக்கும் எதிரிக்கும் என்ன இடப்பிரச்சனை இருந்தது என்றால் நான் குடியிருக்கும் வீட்டை எதிரி வாங்குவதற்கு முயற்சி செய்தது எனக்கு தெரியாது. அதனால் பிரச்சனை. மேற்படி விவரங்களை போலிசாரிடமும் கூறியுள்ளேன்.

3) நான் எனது புகார் மனுவில் வீட்டிற்கு உள்ளே இருந்தேனா அல்லது வீட்டிற்கு வெளியே இருந்தேனா என்று குறிப்பிடவில்லை என்றால் வீட்டில் இருந்ததாக புகார் மனுவில் குறிப்பிட்டிருந்தேன்.

4) நான் கடை வைத்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் என்று நடந்தது என்றால் 18.10.2020 அன்று நடைபெற்றது. அன்றைய தினம் என்ன கிழமை என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5) என் மீது பூதப்பாண்டி காவல்நிலையத்தில் குற்ற எண் 309/2017 என்ற வழக்கில் எதிரி என் மீது புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு C.C.No.97/2018 ஆக நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

6) 18.10.2020 அன்று நடைபெற்ற சம்பவத்திற்கு 22.10.2020 அன்று தான் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது என்றால் நான் அடிபட்டதால் பயந்து வீட்டிலேயே இருந்துவிட்டேன். என்னுடன் எனது மகள், பேரப்பிள்ளைகள் ஆகியோர்கள் குடியிருந்து வருகிறார்கள். அந்த விவரத்தை நான் எனது புகார் மனுவிலோ, போலிஸ் விசாரணையிலோ கூறியுள்ளேனா என்றால் இல்லை.

7) எனது வீட்டிற்கும் எதிரி வீட்டிற்கும் இடையே 30 அடி தூரம் இருக்கும். இடையே ஒரு சாலை மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். எதிரியின் வீடு உயரமான இடத்திலும், எனது வீடு சற்று தாழ்ந்தும் உள்ளது என்றால் சரிதான். எதிரி அவரது வீட்டில் பேசுவதை கேமராவில் பதிவு செய்வதுதான் என்னுடைய வேலை என்றால் சரியல்ல. எனக்கு எத்தனை மகன்கள் உள்ளனர் என்றால் 3 மகன்கள் உள்ளனர். என்னுடன் எத்தனை மகன்கள் வசித்து வருகின்றனர் என்றால் என்னுடன் மகன்கள் வசித்து வரவில்லை.

8) சம்பவம் உண்மையாக நடைபெற்றிருந்தால் எனது மகன்கள் மூலமாக உடனடியாக புகார்மனு அளித்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது வீட்டின் பக்கத்திலேயே ஒரு மகன் உள்ளார் என்றால் சரிதான்.

9) எதிரி மீது பூதப்பாண்டி காவல்நிலையத்தில் எத்தனை புகார் மனு அளித்துள்ளேன் என்றால் இந்த வழக்குடன் சேர்த்து 2 புகார் மனு அளித்துள்ளேன். நான் எதிரி மீது பல புகார் மனு கொடுத்துள்ளேன் என்றாலும் நடவடிக்கை எடுக்காததால் ஆவணங்களை ஜோடித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10) நான் ஞாயிற்றுக்கிழமை வழக்கமாக கடை திறப்பேனா என்றால் சில சமயம் திறப்பேன்.

11) நான் சம்பவத்தின்போது கடையில்தான் இருந்தேன் என்றாலும் வீட்டில் இருக்கவில்லை என்றாலும் சரியல்ல. குற்றம்சாட்டப்பட்ட நபரின் மீது தனிப்பட்ட பகையை தீர்ப்பதற்காக இந்த வழக்கு ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல.

12) சிசிடிவி கேமரா நகலை நான் சான்றிதழுடன் போலிசாரிடம் தாக்கல் செய்தேனா என்றால் அத்தாட்சி கொடுத்துள்ளேன்.

நீதிமன்றம்: மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் பூதப்பாண்டி.

வழக்கு எண் : STC 496/ 2022

வழக்கு சாட்சி: P.W. 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - வில்சன் | ஜாதி | - |
| தந்தை பெயர் | - | தொழில் | - |
| கிராமம் | - | சமயம் | - |
| தாலுக்கா | - | வயது | - |
| தேதி | - 14.10.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.10.2025

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் BNSS பிரிவு 355 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். )

**முதல் விசாரணை**

1) நான் அருமநல்லூர் கொல்லந்திருத்தியில் குடியிருந்து வருகிறேன். நான் ரப்பர் பால் வெட்டும் வேலை செய்கிறேன்.

2) எதிரியை எனக்கு தெரியும். 18.10.2020 அன்று காலை 11.00 மணி அளவில் எதிரியும், புகார்தாரரும் கெட்ட வார்த்தை பேசிக்கொண்டிருந்தார்கள். எதிரி அ.சா.1 கோபாலனை பார்த்து தேவடியாபயலே கோபாலா, பஞ்சம்பிளைக்க வந்த நாயே ஊரைவிட்டு ஓடிவிடு இல்லையென்றால் வெட்டிகொன்னுபோடுவேன் என்று மிரட்டினார்.

3) 22.10.2020 அன்று போலிசார் எனது வீட்டில் வந்து விசாரித்து கையொப்பம் பெற்றார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) போலிசார் 22.10.2020 அன்று எத்தனை மணிக்கு வந்து எனது வீட்டில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

2) நான் முதல் விசாரணையில் கூறியவாறுதான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

3) சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன் என்றால் சரிதான். குற்றம்சாட்டப்பட்ட நபர் எங்கிருந்து பேசினார் என்று எனக்கு ஞாபகமில்லை. குற்றம்சாட்டப்பட்ட நபர் எனக்கு உறவினரா என்றால் இல்லை. குற்றம்சாட்டப்பட்ட நபர் எனது சொந்த மாமன் மகன் என்றால் தற்போது எனக்கு பேச்சுவார்த்தை கிடையாது.

4) சம்பவ இடத்திலிருந்து எனது வீடு எவ்வளவு தொலைவு உள்ளது என்றால் கொஞ்சம் தள்ளிதான் உள்ளது எனக்கு ஞாபகமில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து போடும் சத்தம் எனது வீட்டிற்கு கேட்குமா என்றால் கேட்கும். நான் சம்பவத்தின் போது அருமநல்லூர் கடைக்கு வருவதற்காக வந்துகொண்டிருந்தேன்.

5) பொய்சாட்சியம் அளித்தால் தண்டனை உண்டு என்று எனக்கு தெரியுமா என்றால் நான் நடந்த சம்பவத்தை தான் கூறினேன். புகார்தாரர் எனது உறவினரா என்றால் இல்லை. பழக்கமான நபரும் இல்லை.

6) குற்றம்சாட்டப்பட்ட நபரை நான் தாக்கியதாக குற்ற எண் 309/2017 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை.

7) நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவத்தை பார்த்திருந்தால் குற்றம்சாட்டப்பட்ட நபர் எந்த இடத்திலிருந்து பேசினார் என்று கூறியிருப்பேன் என்றால் சரியல்ல.

நீதிமன்றம்: மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் பூதப்பாண்டி.

வழக்கு எண் : STC 496/2022

வழக்கு சாட்சி: P.W. 3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - ஜான் கிறிஸ்டோபர் | ஜாதி | - |
| தந்தை பெயர் | - | தொழில் | - |
| கிராமம் | - | சமயம் | - |
| தாலுக்கா | - | வயது | - |
| தேதி | - 14.10.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.10.2025

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் BNSS பிரிவு 355 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். )

**முதல் விசாரணை**

1) நான் அருமநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் பால் வெட்டும் வேலை செய்து வருகிறேன்.

2) எதிரியை எனக்கு தெரியும்.

3) 18.10.2020 அன்று பகல் 11.00 மணியளவில் அருமநல்லூர் கடைக்கு சென்றேன். எதிரி அ.சா.1 கோபாலனை கெட்ட வார்த்தையில் பேசிக்கொண்டிருந்தார். அப்போது நான் அ.சா.1 கோபாலனிடம் வீட்டிற்கு போகுமாறு சமாதானம் செய்தேன். அவரும் வீட்டிற்கு சென்றுவிட்டார். பின்பு கடைக்கு போய்விட்டு திரும்ப போகும்போது எதிரி பேசிக்கொண்டுதான் இருந்தார்.

3) போலிசார் 22.10.2020 அன்று விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் முதல் விசாரணையில் கூறியவாறுதான் போலிஸ் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான்.

2) நான் வீட்டிலிருந்து அருமநல்லூர் சென்றுகொண்டிருந்தேன். நான் வழக்கமாக சம்பவ இடத்தின் வழியாகத்தான் செல்வேன். நான் வழக்கிற்காக சம்பவ இடம் வழியாக வந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் கோபாலன் சம்பவத்தின்போது அவர் வீட்டின் காம்பவுண்டின் கேட்டின் அருகில் நின்றார். புகார்தாரர் வீட்டின் உள்ளே இருந்தார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. குற்றம்சாட்டப்பட்ட நபருக்கும் எனக்கும் உள்ள பகையை தீர்ப்பதற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குற்றம்சாட்டப்பட்ட நபருக்கும் எனக்கு நன்கு பேச்சுவார்த்தை உண்டு. நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குற்றம்சாட்டப்பட்ட நபர் அவரது வீட்டின் கேட்டின் அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தார்.